தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

சென்னை – 600 051



# செம்மறியாட்டு இனங்கள்



















பல்கலைக்கழக இணையதளம் : www.tanuvas.ac.in



# செம்மறியாடுகளைத் தேர்வு செய்தல்

## கிடா ஆடுகள்



- வயதிற்கு தகுந்த வளர்ச்சியுள்ளதாகவும் மற்றும் எடையுள்ளதாகவும் இருத்தல் நல்லது.
- 12 முதல் 14 மாதங்களில் பருவமடையும் திறன் பெற்றவை.
- நன்கு வளர்ச்சி அடைந்த விதைப்பைகள்.
- உயரமாகவும், உடல் நீளமாகவும் இருக்க வேண்டும்.
- மார்பு அகன்றதாகவும், விரிந்த மார்பெலும்புகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.
- பின்னங்கால்கள் நன்கு திடமாக இருத்தல் வேண்டும்.

## பெட்டை ஆடுகள்



- தலை குறுகியதாகவும், கழுத்து மெலிந்தும் காணப்பட வேண்டும்.
- உடல் நீளமாகவும், மடி நன்கு பருத்தும் உடலோடு ஒட்டியிருத்தல்.
- 10 முதல் 15 மாதங்களில் பருவமடையும் தன்மை பெற்றிருத்தல்.
- தற்காலிக பற்கள் பிறந்த முதல் சில வாரங்களில் முளைக்கின்றன.
- ஒரு வருட காலத்திற்கு பின்னரே நிரந்தர பற்கள் முளைக்கும்.

# கொட்டகை அமைப்பு






- குறைந்த அளவில் விவசாய நிலத்திலேயே கொட்டகை அமைத்து பராமரிக்கலாம்.
- நல்ல காற்றோட்ட வசதியுடன் மேட்டுப்பாங்கான இடத்தில் பண்ணை அமைத்தல் நன்று.
- கிழக்கு மேற்காக நீளவாக்கில் கொட்டகை இருக்க வேண்டும்.
- கொட்டகையின் பக்கவாட்டு சுவர்கள் 2 அடிக்கு அமைத்து நல்ல காற்றோட்டம் கிடைக்குமாறு செய்யலாம்.

## தேவைப்படும் இடவசதி

| | | |
|---|---|---|
| குட்டிகள் | : | 4–5 ச. அடி |
| பெட்டை ஆடுகள் | : | 10–15 ச.அடி |
| வளர்ந்த கிடாக்கள் | : | 15–20 ச.அடி |

# வளர்ப்பு முறைகள்

## மேய்ச்சல் முறை

- பயிர் அறுவடையான நிலங்கள் / வயல்களில் ஆடுகளை மேய விடலாம்.
- சுமார் 8 முதல் 9 மணி நேரம் மேயவிட்டு பின் மாலையில் கொட்டகையில் ஆடுகளை அடைக்க வேண்டும்.
- சுமார் 30 முதல் 40 ஆடுகள் வரை இம்முறையில் பராமரிக்கலாம்.
- ஆடுகளுக்குக்கான தீவனச் செலவு ஏதும் இல்லை.



## மேய்ச்சலுடன் கூடுதல் தீவனமிடுதல்

- மேய்ச்சலுக்கு சென்று வந்த ஆடுகளுக்கு மாலையில் தரமான பசுந்தீவனங்களை மரங்களின் இலைத் தழையுடன் சேர்த்து ஆட்டிற்கு நாளொன்றுக்கு 1 கிலோ வரை தீவனமளித்தால் ஆடுகளின் வளர்ச்சி கூடும்.
- ஆடுகளின் வளர்ச்சித் திறனை அதிகரிக்க அடர்தீவனமும் மேய்ச்சல் குறைந்த காலங்களில் அளித்திடலாம்.



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# இளங்குட்டிகள் பராமரிப்பு



- பிறந்தவுடன் இளம் ஆட்டுக் குட்டிகளின் மேலுள்ள வழவழப்பான திரவங்களை குறிப்பாக நாசிகளின் மேலுள்ளவற்றை நீக்க வேண்டும்.
- குட்டிகள் பிறந்த 1 முதல் 2 மணி நேரத்திற்குள் சீம்பால் குடிக்க விட வேண்டும்.
- தொப்புள் கொடியை 4 செ.மீ. விட்டு நன்கு சுத்தம் செய்யப்பட்ட கத்தரிக்கோல் மூலம் வெட்டி அதற்கு டிஞ்சர் அயோடின் தடவ வேண்டும். டிஞ்சர் அயோடின் திரவத்தில் நனைத்தெடுத்த நூலால் தொப்புள் கொடியை சுற்றி இறுக்கிக் கட்ட வேண்டும்.
- தரமான குட்டிகளை உற்பத்தி செய்யும் பண்ணைகளில் கூடுதலாக ‘டெட்டனஸ்’ நோய்த் தடுப்பூசியும் போட வேண்டும்.
- கிடா குட்டிகளை 10 முதல் 12 வார வயதிலேயே ஆண்மை நீக்கம் செய்வது அவசியம்.
- குட்டிகளை 3 வது மாத வயதில் தாயிடமிருந்து பிரிக்கலாம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# தீவனப் பராமரிப்பு

## குட்டிகளுக்கான தீவனம்

♦ இளம் செம்மறியாட்டுக் குட்டிகள் முதல் மூன்று மாதங்கள் வரை தாயிடம் பால் குடிக்கும்.
♦ நான்காவது வாரம் முதல் அடர் தீவனம் உட்கொள்ள ஆரம்பிக்கும்.

**குட்டிகளுக்கான தொடக்க அடர்தீவனக் கலவை (%)**

| | | |
|---|---|---|
| மக்காச்சோள மாவு | : | 70 |
| கடலைப் பிண்ணாக்கு / சோயா பிண்ணாக்கு | : | 15 |
| கோதுமைத் தவிடு | : | 12 |
| தாது உப்பு | : | 2 |
| உப்பு | : | 1 |

**குட்டிகளுக்கான அடர்தீவன அளவு** (12வார வயது வரை அடர் தீவனம் அளிக்க வேண்டும்)

| வயது | | நாளொன்றிற்கு அடர் தீவனம் |
|---|---|---|
| முதல் 8 வாரம் | : | 50–100 கிராம் மற்றும் 0.5–1 கிலோ பசுந்தழை தீவனம் |
| 8வார வயதிற்கு மேல் | : | 100–150 கிராம் அடர் தீவனம் மற்றும் 1–1.5 கிலோ பசுந்தழை தீவனம் |

## வளர்ந்த ஆடுகளுக்கான தீவனம்

**பசுந்தீவன தேவை**

♦ பசும்புல் மற்றும் மர இலைகள் – 1:1
♦ பசும்புல், பயிறு வகைப் புற்கள் மற்றும் மர இலைகள் 50:30:20

**பசுந்தீவனத்தின் பயன்கள்:** ஆடுகள் நாளொன்றிற்கு 60 – 75 கிராம் வளர்ச்சியை அடையும். தீவனச் செலவும் குறையும்.

**அடர் தீவனத் தேவை**

பால் தரும் ஆடுகள், பொலிக் கிடாக்களுக்கு : நாள்தோறும் 300 முதல் 350 கிராம் வரை

**ஆடுகளுக்கான மாதிரி கலப்புத் தீவனம்**

| பொருட்கள் | சதவிகிதம் |
|---|---|
| தானிய வகைகள் | 30–50 |
| பிண்ணாக்கு வகைகள் | 20–25 |
| தவிடு வகைகள் | 25–35 |
| தாது உப்பு | 2 |
| உப்பு | 1 |

| தீவன அளவு | அடர் தீவனம் (நாள் ஒன்றுக்கு) |
|---|---|
| 6 முதல் 12 மாதம் வரை | 200 – 250 கிராம் |
| சினையுற்ற ஆடுகள் | 250 – 300 கிராம் |
| பால் வற்றிய ஆடுகள் | 150 – 200 கிராம் |
| பால் தரும் ஆடுகள் மற்றும் கிடாக்கள் | 300 – 350 கிராம் |

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# இனவிருத்தி முறைகள்

## இனவிருத்திக் காலங்கள்

ஆடுகளில் பொதுவாக பங்குனி – வைகாசி, ஆனி– ஆவணி, ஐப்பசி – கார்த்திகை மாதங்களில் இனவிருத்தி நடைபெறுகின்றது.

## கிடாக்கள் பராமரிப்பு

- இனப்பெருக்க கிடாக் குட்டிகள் 12 முதல் 14 மாதங்களில் பருவமடைய வேண்டும்.
- கிடாக்களை சுமார் 6 வயது வரை இனச்சேர்க்கைக்குப் பயன்படுத்தலாம்.
- கிடாக்களை அதிகாலை நேரங்களில் இனச்சேர்க்கைக்காக பெட்டை ஆடுகளுடன் விட வேண்டும்.
- 20 பெட்டை ஆடுகளுக்கு 1 கிடா போதுமானது .
- கிடாக்களை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மாற்றுவதன் மூலம் நல்ல வளமுள்ள குட்டிகளைப் பெறலாம்.

## பெட்டை ஆடுகள் பராமரிப்பு

- நல்ல தரமான பெட்டை ஆடுகள் 10 முதல் 12 மாதங்களில் பருவமடையும்.
- 1½ வருட வயதில் தான் இனச் சேர்க்கைக்குப் பயன்படுத்த வேண்டும்.
- இனச்சேர்க்கைக்கு விடுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு நல்ல பசுந் தீவனப் பயிர்களும், அடர் தீவனமும் அளிக்க வேண்டும்.
- சினைப்பருவ தருணத்தில் அமைதியிழந்து வாலை ஆட்டிக் கொண்டு இருக்கும்.
- தீவனம் உட்கொள்ளும் அளவு குறையும்.

## இனச்சேர்க்கை அறிதல்

- பண்ணைகளில் இனச்சேர்க்கை நடந்தனவா என்பதை அறிய பெட்டைகளுடன் கிடாவை விடுமுன் கிடாவின் மார்பின் மீது வண்ணப் பொடிகளை எண்ணெய் கலந்து பசையுடன் பூச வேண்டும்.
- பருவத்தில் பெட்டைகளுடன் கிடா இணையும் போது கிடாவின் மார்பின் மீது பூசப்பட்டுள்ள வண்ணம் பெட்டை ஆடுகளின் முதுகில் ஒட்டிக் கொள்ளும். இதனைக் கொண்டு பெட்டை ஆடுகளுடன் கிடாக்களின் இனச்சேர்க்கையை அறிந்து கொள்ளலாம்.



# சினையான ஆடுகளில் அறிகுறிகளும், குட்டிகள் ஈனுதலும்

- சினைக்காலம் 145 முதல் 150 நாட்களாகும்.
- சினைப்பட்ட ஆடுகளில் பொதுவாக மூன்றாவது மாதம் முதல் வயிறு பெருத்து காணப்படும்.
- நாட்கள் செல்லச் செல்ல பாலின் வெண்மை நிறம் மறைந்து சற்றே பிசுபிசுப்பான பாலாக காணப்படும்.
- சினைப்பட்ட ஆடுகளை இரவு நேரங்களில் தனிக் கொட்டில்களில் அடைத்தல் நல்லது.

## குட்டி ஈனுதல் அறிகுறிகள்

- அமைதியின்றி காணப்படும்.
- கால்களால் தரையை பிராண்டுதல்.
- மூச்சுத் திணறல், வயிறு சுருங்கி விரிதல் போன்றவை.
- ஆடுகளின் பிறப்பு உறுப்பிலிருந்து கெட்டியான வெள்ளைத் திரவம் தோன்றும். சிறிது நேரத்தில் குட்டி வெளிவரும்.
- குட்டி போட்ட நான்கு மணி நேரத்திற்குள் நஞ்சுக் கொடி, விழுந்து விடும்.
- குட்டி ஈன்ற தினத்திலிருந்து குட்டிகளைத் தாயின் அருகே சுமார் ஏழு நாட்களாவது சேர்த்து வைக்க வேண்டும்.

# நோய் தடுப்பும் பராமரிப்பும்

- புதிதாக வாங்கப்படும் ஆடுகளை நோயில்லாத சமயங்களிலும், நோய் பரவாத இடங்களிலும் அறிந்து வாங்க வேண்டும்.
- புதிதாக வாங்கும் ஆடுகளை தனியாக ஒரு மாதம் பிரித்து வைத்திருக்க வேண்டும்.
- குடற்புழுநீக்க மருந்தும், பருவத்திற்கேற்ற தொற்று நோய் தடுப்பூசி மருந்துகளும் அளித்த பிறகு மற்ற ஆடுகளுடன் சேர்க்க வேண்டும்.
- தொற்று நோய் இருப்பின் ஆடுகளை தனியாக வைத்து கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.
- பிறந்த குட்டிகளின் தொப்புள் கொடியை கிருமிநாசினி மருந்து கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
- தீவனத்தொட்டி மற்றும் தண்ணீர் தொட்டிகளை தினமும் சுத்தமாக கழுவ வேண்டும்.
- சாணத்தை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.
- தரையில் தண்ணீர் தேங்காமல் உலர்ந்த நிலையில் வைக்க வேண்டும்.
- கொட்டகையை காற்றோட்டமாக வைத்திருக்க வேண்டும்.
- ஆடுகளுக்கு தடுப்பூசிகளை தவறாமல் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி போட வேண்டும்.
- ஆடுகளில் உண்ணி, பேன் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051



# நோய்த் தடுப்பூசி அட்டவணை

| நோய் | நோய் தாக்கும் காலம் | தடுப்பூசி போட வேண்டிய இடைவெளி | தடுப்பூசி போட வேண்டிய மாதம் |
|---|---|---|---|
| துள்ளுமாரி நோய் | மழைக்காலம் | 6 மாதத்திற்கு ஒரு முறை | ஆவணி, ஐப்பசி |
| அடைப்பான் நோய் | கோடை மழைக்குப் பின்னர் | ஆண்டிற்கு ஒரு முறை | பங்குனி, சித்திரை |
| கோமாரி நோய் | மழைக் காலங்களில் | 6 மாதத்திற்கு ஒரு முறை | புரட்டாசி |
| நீல நாக்கு நோய் | மழைக் காலங்களில் | ஆண்டிற்கு ஒரு முறை | ஐப்பசி, கார்த்திகை, மார்கழி |
| ஆட்டம்மை | கோடைக் காலம் | ஆண்டிற்கு ஒரு முறை | சித்திரை, வைகாசி |

## நோய் பாதித்த ஆடுகள்



மூக்கில் இருந்து இரத்தம் வருதல்



வாய் மற்றும் நாக்கில் புண்



அம்மை கொப்புளங்கள்

**குறிப்பு :**
இடத்திற்கு இடம் வியாதிகள் வருவது மாறுபடுகின்ற காரணத்தினால் தேவைக்கு ஏற்றவாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறும் குறிப்பிட்ட மாதங்களில் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி தேவையான தடுப்பூசி போடுவதன் மூலம் கொடிய தொற்று நோய்களில் இருந்து ஆடுகளை காப்பாற்றி பொருளாதார மேம்பாடு அடையலாம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

# ஒட்டுண்ணி நோய்கள்





- ஒட்டுண்ணிகள் அதிகம் பாதித்து உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகின்றன.
- குடற்புழுநீக்க மருந்துகளை தகுந்த சமயத்தில் அளிப்பதன் மூலம் இதை கட்டுப்படுத்தலாம்.
- ஆடுகளை தட்டைப் புழுக்கள், நாடாப் புழுக்கள் மற்றும் உருண்டைப் புழுக்கள் அதிக அளவில் பாதிக்கின்றன.
- பாதிக்கப்பட்ட ஆடுகளில் உடல் எடை குறைதல், கழிச்சல் மற்றும் கீழ்த்தாடை வீக்கம் போன்ற அறிகுறிகள் தென்படலாம்.
- ஆடுகளுக்கு மூன்று மாத வயதை அடையும் வரை மாதம் ஒரு முறையும், பிறகு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
- தட்டைப் புழுக்களை ஒழிக்க ஆடுகளை தண்ணீர் தேங்கும் நீர் நிலைகளிலும், நத்தைகள் அதிகமுள்ள குளம், குட்டைகளின் அருகிலும் மேய விடுதல் கூடாது.
- கொசு, ஈ, பேன், தெள்ளுப் பூச்சி, உண்ணி மற்றும் சொறிப்பூச்சிகளும் ஆடுகளை அதிகமாகத் தாக்கும்.
- கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி கிருமிநாசினி மருந்துகளை தெளித்து புறஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

# பயன் குன்றிய ஆடுகளைக் கழித்தல்

- பண்ணையை இலாபகரமாக நடத்த பண்ணையிலுள்ள பயன் குன்றிய ஆடுகளைக் கழித்தல் அல்லது நீக்குதல் ஒரு முக்கியப் பணியாகும்.
- பயன் குன்றிய ஆடுகளை வருடத்திற்கு ஒரு முறை பின்வரும் காரணங்களுக்காக கழிக்கலாம்.

✦ ஒரு வருடத்திற்கு ஒரு குட்டி போடாத ஆடுகள்.

✦ நோய் கண்ட மடியையுடைய மற்றும் குறைந்த பால் சுரப்புடைய ஆடுகள்.



✦ குறைவான மற்றும் தரம் குறைந்த கம்பள உற்பத்தியுடைய ஆடுகள்.

✦ பல் விழுந்த ஆடுகள்.

✦ ஆறு வருட வயதிற்கு மேலுள்ள ஆடுகள்.

✦ பிறப்பு உறுப்பில் நோய் கண்ட கிடாக்கள்.



✦ குறைந்த இனவிருத்தித் திறன் கொண்ட கிடாக்கள்.

✦ குறைந்த வளர்ச்சித் திறனுடைய குட்டிகளை ஈனும் கிடாக்கள் மற்றும் பெட்டை ஆடுகள்.

✦ மரபியல் சம்பந்தமான நோய்களைக் கொண்ட குட்டிகளை ஈனும் கிடாக்கள்.

✦ ஆறு முதல் ஏழு வயதிற்கு மேற்பட்ட கிடாக்களை பண்ணையிலிருந்து கழித்தல் நல்லது.

# நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி




## நீலநாக்கு நோய்

- இந்த நோய் கூலிகாய்ட்ஸ் என்ற சிறு ஈக்கள் கடிக்கும்போது நோயுற்ற ஆட்டிலிருந்து மற்ற ஆட்டிற்கு பரவுகிறது.
- இந்நோய் செம்மறியாடுகளை அதிக அளவில் தாக்கி மிகுந்த பொருளாதார இழப்பினை உண்டாக்குகிறது.

## நோய் அறிகுறிகள்

- காய்ச்சல் அதிகமாக இருக்கும்.
- உதடுகள், ஈறுகள் ஆகிய இடங்களில் புண் உண்டாகும்.
- அதிக இரத்த ஓட்டம் காரணமாக நாக்கு அதிக சிவப்பு நிறத்துடன் காணப்படும்.
- இந்நோய் கழுத்து தசைகளையும் பாதிப்பதால் கழுத்து ஒரு பக்கமாக சாய்ந்து காணப்படும்.

# பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட நீலநாக்கு நோய் தடுப்பூசியும், நோய் தடுப்புமுறைகளும்




## தடுப்பூசி

- வீரியம் நீக்கப்பட்ட நீலநாக்கு நோய் தடுப்பூசி (நீலநாக்கு நோய் பிரிவுகளான 1, 2, 10, 16 மற்றும் 23) நீலநாக்கு நோய்க்கான அகில இந்திய கூட்டுமுயற்சி திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.
- பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட இத்தடுப்பூசியை அதிக அளவில் உற்பத்தி செய்திட கால்நடை தடுப்பூசி மருந்துகள் தயாரிப்பு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




## தடுப்பு முறைகள்

- நச்சுயிரி தடுப்பூசிகள் பயன்படுத்துதல்: 3 மாத வயதிற்கு மேலான ஆடுகளுக்கு ஜூலை– செப்டம்பர் மாதங்களில் தடுப்பூசி போட வேண்டும்.
- ஒட்டுண்ணி நீக்கி மருந்துகள் அடிப்பதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம்.